செய்தி வெளியீடு எண் : 2353 நாள் : 26.11.2023

# தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

# செய்தி வெளியீடு

## கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள்–2023

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் நாட்டிலுள்ள இளைஞர்களிடையே விளையாட்டு மற்றும் உடற்தகுதியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, ஒன்றிய அரசின் சார்பில் நடத்தப்படுகின்ற ஒருங்கிணைந்த விளையாட்டு நிகழ்வாகும். இந்த விளையாட்டு போட்டிகள் 17 வயதுக்குட்பட்ட மற்றும் 21 வயதுக்குட்பட்ட பிரிவுகளைக் கொண்டிருந்தது. ஆனால், 2021 ஆம் ஆண்டில் ஹரியானாவில் நடைபெற்ற கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டியில், 18 வயதுக்குட்பட்ட பிரிவிலும் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இதே போன்று 2022 இல் மத்தியப் பிரதேசத்திலும் நடத்தப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கையின் அடிப்படையில், கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள்–2023–யினை தமிழ்நாட்டில் நடத்துவதற்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் 2023–ஆம் ஆண்டு கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளைத் தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாக நடத்திட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார்.

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள்–2023 தமிழ்நாட்டில் உள்ள சென்னை, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய நான்கு நகரங்களில் 19.01.2024 முதல் 31.01.2024 வரை நடைபெற உள்ளது. இந்தப் போட்டிகளில் சுமார் 5000 விளையாட்டு வீரர்–வீராங்கனைகள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

நடத்தப்படவுள்ள விளையாட்டுகள் விவரம்:–

| | | | | |
|---|---|---|---|---|
| தடகளம் (Athletics) | கால்பந்து (Football) | குத்துச்சண்டை (Boxing) | வாள்வீச்சு (Fencing) | வாலிபால் (Volleyball) |
| பளு தூக்குதல் (Weightlifting) | ஸ்குவாஷ் (Squash) | வில்வித்தை (Archery) | ஜூடோ (Judo) | கட்கா (Gatka) |
| டேபிள் டென்னிஸ் (Table Tennis) | பேட்மிண்டன் (Badminton) | சைக்கிள் ஓட்டுதல் (Cycling) | கோ–கோ (Kho-Kho) | யோகாசனம் (Yogasana) |
| மல்யுத்தம் (Wrestling) | ஹாக்கி (Hockey) | நீச்சல் (Swimming) | ஜிம்னாஸ்டிக்ஸ் (Gymnastics) | டென்னிஸ் (Tennis) |

| | | | | |
|---|---|---|---|---|
| துப்பாக்கி சுடுதல் (Shooting) | களரிபயட்டு (Kalaripayattu ) | மல்லக்கம்பு (Mallakhamb) | கூடைப்பந்து (Basketball) | தாங் தா (Thang Ta) |
| கபடி (Kabbadi) | சிலம்பம் (Silambam ) (Demo Game) | | | |

மேலும் நடைபெறவுள்ள கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள்–2023–ல் கூடைப்பந்து, கபடி, கோ–கோ, வாலிபால், ஹாக்கி மற்றும் கால்பந்து ஆகியவற்றிற்கான குழு விளையாட்டுகளில் தமிழ்நாட்டு அணியும் இடம்பெற உள்ளது.தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்–வீராங்கனைகள், அவர்களின் சிறப்பான செயல்திறனின் அடிப்படையில் தமிழ்நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்த தேர்வு செய்யப்படுவார்கள். தமிழ்நாட்டு அணிகளில் இடப்பெறுவதற்கான தேர்வு சோதனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் நடத்தப்படவுள்ளது.

தேர்வு சோதனைகளின் விவரங்கள்:–

| வ. எண் | விளையாட்டு | பாலினம் | இடம் | நாள் & நேரம் |
|---|---|---|---|---|
| 1. | கூடைப்பந்து | பெண்கள் | ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கம், சென்னை. | 01.12.2023 – காலை 7.00 மணி |
| | | ஆண்கள் | | 02.12.2023 – காலை 7.00 மணி |
| 2. | கால்பந்து | பெண்கள் | ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம், சென்னை. | 30.11.2023 – காலை 7.00 மணி |
| | | ஆண்கள் | | 30.11.2023 – காலை 7.00 மணி & 01.12.2023 – காலை 7.00 மணி |
| 3. | கபடி | பெண்கள் | மாவட்ட விளையாட்டு வளாகம், நேரு பூங்கா, சென்னை. | 30.11.2023 – காலை 7.00 மணி |
| | | ஆண்கள் | | 01.12.2023 – காலை 7.00 மணி |
| 4. | கோ–கோ | பெண்கள் | மாவட்ட விளையாட்டு வளாகம், நேரு பூங்கா, சென்னை. | 30.11.2023 – காலை 7.00 மணி |
| | | ஆண்கள் | | 01.12.2023 – காலை 7.00 மணி |
| 5. | வாலிபால் | பெண்கள் | மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி அரங்கம், சென்னை. | 30.11.2023 – காலை 7.00 மணி |
| | | ஆண்கள் | | 01.12.2023 – காலை 7.00 மணி |
| 6. | ஹாக்கி | பெண்கள் | மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி அரங்கம், சென்னை. | 30.11.2023 – காலை 7.00 மணி |
| | | ஆண்கள் | | 01.12.2023 – காலை 7.00 மணி |

தேர்ந்தெடுக்கப்படும் விளையாட்டு வீரர்–வீராங்கனைகளுக்கு திறமை மற்றும் திறன்களை மேம்படுத்த தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் அந்தந்த விளையாட்டுப் பிரிவுகளில் தகுந்த பயிற்சி அளிக்கப்படும்.

பங்கேற்பதற்குத் தகுதிபெற, விளையாட்டு வீரர்கள் வயதுச் சரிபார்ப்பு செயல்முறைக்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் இரண்டினைச் சமர்ப்பிக்க வேண்டும்.

➤ ஆதார் அட்டை அல்லது பாஸ்போர்ட்

➤ பள்ளிக் கல்விச் சான்றிதழ் (SSLC/ 10ஆம் வகுப்பு)

➤ பிறப்புச் சான்றிதழ் (குறைந்தது 5 ஆண்டுகளுக்கு முன்பு, மாநகராட்சி அல்லது கிராம பஞ்சாயத்து மூலம் ஜனவரி 1, 2013 அன்று அல்லது அதற்கு முன் வழங்கப்பட்டது)

தகுதியுள்ள அனைத்து விளையாட்டு வீரர்–வீராங்கனைகளும் தேர்வு சோதனைகளில் பங்கேற்க அழைக்கப்படுகிறார்கள்.

**உறுப்பினர் செயலர்,**

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்,**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in